பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

15 11 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் கலாச்சார பெருமைக்கு போடோ இன மக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.
3. பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தால் ஏற்படும் பேரிடர்களை கட்டுப்படுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
4. ஸ்பெயின் நாட்டின் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.
5. பக்ரைன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Vishal Vasudevan** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

**Bodo** இன மக்களின் பாரம்பரிய கலாச்சாரத்தை கொண்டாடும் வகையிலான முதலாவது போடோலேண்ட் திருவிழாவை புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை தொடங்கிவைத்தார்.

**Bodo** இன தலைவரான **Bodofa Uppendra Nath Brahma** -வின் சிலைக்கு பிரதமர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

போடோ இன பழங்குடியினரின் கலை நிகழ்ச்சியையும் அவர் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் கலாச்சார பெருமைக்கு போடோ இன மக்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

ஜார்கண்டில் இரண்டாம் கட்டமாக 38 தொகுதிகளுக்கும், மகாராஷ்ட்ராவில் 288 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

ஜார்கண்ட் மாநிலத்தில் 43 தொகுதிகளில் கடந்த 13-ஆம் தேதி முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

எஞ்சியுள்ள 38 தொகுதிகளில் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாகவும், மகாராஷ்ட்ராவில் ஒரே கட்டமாகவும் வரும் 20-ஆம்தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ஜார்கண்டின் தன்பாத் அருகே **'Tundi '** என்ற இடத்தில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பாதுகாப்புத்துறை அமைச்சருமான திரு ராஜ்நாத் சிங் பங்கேற்று உரையாற்றினார்.

முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசை அகற்றுவதற்கான தருணம் இது என்றும், பிஜேபி-க்கு ஜார்கண்ட் மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

**'Dumka, Pakur, Jama** ஆகிய இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பிஜேபி வேட்பாளர்களை ஆதரித்து, அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், திரு ஹிமந்த பிஸ்வ சர்மா, திரு சம்பை சோரன் ஆகியோர் வாக்கு சேகரித்தனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக **'Godda '** என்ற இடத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மீண்டும் தங்கள் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

தியோகார் என்ற இடத்தில் ராஷ்ட்ரிய ஜனதாதள மூத்த தலைவர் திரு தேஜஸ்வி யாதவ், பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதேபோல், இடதுசாரி கட்சிகளின் தலைவர்களும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மகாராஷ்ட்ரா மாநிலம் **'Hingoli , Yawatmal, Chandrapur** ஆகிய இடங்களில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு அமித் ஷா பங்கேற்று, பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார்.

சாங்லி என்ற இடத்தில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய தேசியவாத காங்கிரஸ் கட்சியின் திரு சரத்பவார், அரசியல் சாசன சட்டத்தை மாற்ற விரும்பும் பிஜேபி-க்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று திரள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உத்தவ் பால் தாக்கரே சிவசேனா தலைவர் திரு உத்தவ் தாக்கரே, சத்ரபதி, சம்பாஜி பகுதியில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் பங்கேற்று பேசினார்.

மகாராஷ்ட்ராவில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, சோயாபீனுக்கான ஆதரவு விலையை மிகவும் குறைத்து வழங்குவதாக அவர் குறை கூறினார்.

**<<<<<>>>>**

பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தால் ஏற்படும் பேரிடர்களை கட்டுப்படுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

அஜர்பைஜானின் பாகு நகரில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாட்டில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு நரேஷ் பால் கங்குவார், தாக்கல் செய்த அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய பிரச்சினையாக பருவநிலை மாற்றம் உருவாகி வருவதாகவும், கார்பன் டை ஆக்ஸைடு இல்லாத நிலையை ஏற்படுத்த இந்தியா தேவையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளில் பருவநிலை மாற்றத்தின் தாக்கம் அதிகரித்து வருவது கவலையளிக்கக்கூடியது என்றும் இந்தியா சார்பில் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவாவில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் எடுக்கப்பட்ட உறுதிமொழியின் முன்னேற்றம் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

**<<<<<>>>>**

பழங்குடியினர் தலைவர் பகவான் பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நாளையொட்டி, திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலை, அத்னாவூர் கிராமத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - அனுராதா – 45 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

குஜராத் மாநிலத்தில் 700 கிலோ போதைப்பொருட்களை அம்மாநில காவல்துறை மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து கடற்படையினர் பறிமுதல் செய்திருப்பதற்கு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின், போதையில்லா பாரதம் என்ற இலக்கை அடையும் வகையில், இந்த நடவடிக்கை அமைந்திருப்பதாக சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத்துறையினருக்கு இடையே ஒருங்கிணைந்த முயற்சி காரணமாக இது சாத்தியமானதாகவும், இந்த பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாகவும் திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>

நேபாளத்தில் இருந்து பங்களாதேஷுக்கு மின்சாரத்தை இந்திய மின்வழிப்பாதை வழியாக அனுப்பும் வசதி முதல் முறையாக இன்று தொடங்கப்பட்டுள்ளது.

மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார், பங்களாதேஷ் மின்சாரத்துறை அமைச்சகத்தின் ஆலோசகர் திரு ஃபவ்சல் கபிர் கான், நேபாள அமைச்சர் திரு தீபக் கட்கா ஆகியோருடன் இணைந்து இந்த வசதியை தொடங்கிவைத்தார்.

மூன்று நாடுகள் இடையே எரிசக்தி பரிமாற்றம் முதல் முறையாக நடைபெற்றிருப்பது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் அதிபர் திரு அனுர குமார திசநாயகே தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணி மூன்றில்-இரண்டு மடங்கு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ளது.

இடதுசாரி கூட்டணியான அந்த கட்சி மொத்தம் உள்ள 225 தொகுதிகளில் 159 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

திரு சஜித் பிரேமதாசா தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி 40 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை தமிழரசு கட்சி எட்டு தொகுதிகளை கைப்பற்றியுள்ளது.

முன்னாள் அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணி ஐந்து தொகுதிகளை மட்டுமே கைப்பற்றி பின்னடைவை சந்தித்துள்ளது.

<<<<<>>>>

ஸ்பெயின் நாட்டின் **Zaragoza** நகரில் உள்ள மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் பத்து பேர் உயிரிழந்தனர். மேலும் இரண்டு பேர் காயமடைந்தனர்.

அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, கரும்புகை பரவியதால், அதனை சுவாசித்து அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெறுவதாகவும், காயமடைந்தவர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்கள் மேலும் கூறினர்.

**<<<<<>>>>**

குரேஷியாவில் ஊழல் புகாருக்கு உள்ளான சுகாதாரத்துறை அமைச்சர் **'Villi Beros**-ஐ பதவி நீக்கம் செய்து அந்நாட்டு பிரதமர் திரு **'Andrej Plenkovic** நடவடிக்கை எடுத்துள்ளார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட **Villi Beros** பின்னர் கைது செய்யப்பட்டதாக அந்நாட்டு ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, ஊழல் புகாரைத் தொடர்ந்து அமைச்சரின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டதாகவும் அந்த தகவல் தெரிவிக்கிறது.

**<<<<<>>>>**

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடந்த ஒரு மாதமாக ஏற்பட்ட புகை மூட்டத்தால், 20 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மூச்சுத் திணறல் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.

லாகூர், முல்தான் நகரங்கள் உலகிலேயே மிக மோசமான சுற்றுச்சூழல் பாதிப்புகளை கொண்ட நகரங்களாக உருவாகியுள்ள நிலையில், ஆஸ்துமா, இதய நோய்கள், வலிப்பு போன்ற பாதிப்புகளால் மக்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அக்டோபர் மாதத்தில் மட்டும் பஞ்சாப் மாகாணத்தில் 20 லட்சம் பேர் உடல்நல பாதிப்புகளால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும், லாகூரில் 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் அந்த தகவல் தெரிவிக்கிறது.

ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பக்ரைன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Vishal Vasudevan** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 23-21 என்ற செட் கணக்கில், இலங்கையின் **Thilina Rajakaruna** –வை வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்று கவின் தங்கம் மற்றும் **Atul John Mathew** –வும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------

மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 12-14, 11-5, 12-10, 11-8 என்ற செட் கணக்கில், இந்தியாவின் வேலவன் செந்தில்குமாரை வென்றார்.

**<<<<<END>>>>>**